57

**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – சேலம் மாவட்டம் – கோவிட் –19 – கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் – கொரோனா வைரஸ் பாதித்த நோயாளிகளுக்காக சிகிச்சை மைய வசதிகள் ஏற்படுத்துதல், உணவூட்டு செலவினங்கள் மற்றும் புதிய கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துவது – தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து (TNSDMA) ரூ.1,00,00,000/– வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே. 2 பிரிவு

**அரசாணை (நிலை) எண்.358** **நாள் 27.04.2021**

**பிலவ, சித்திரை 14**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்க:**

1. அரசாணை(நிலை) எண்.392, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே–II) துறை, நாள் 27.07.2020.
2. அரசாணை(நிலை) எண்.775, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.2) துறை, நாள் 18.12.2020.
3. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண். 16734/ 2020/ பே.மே, நாள் 07.04.2021.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.இ.பே.1/ 563/2020, நாள் 19.04.2021.

*******

**ஆணை:**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாய் நிருவாக ஆணையர், பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் கோவிட்–19 கொராரனோ வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தனிமைப்படுத்தும் மையங்கள், கொரோனா வைரஸ் பாதித்த நோயாளிகளுக்காக சிகிச்சை மைய வசதிகள் ஏற்படுத்துதல், உணவூட்டு செலவினங்கள் மற்றும் புதிய கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துவதற்காக ரூ.2,00,00,000/– (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) சேலம் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை நாள் 18.08.2020–ன்படி, சேலம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பாதித்த நோயாளிகளுக்காக சிகிச்சை மைய வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் புதிய கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல் உணவூட்டு செலவினங்கள் போன்றவைகளுக்காக உதவி இயக்குநர், ஊராட்சிகள் (ஊவ), சேலம் அவர்களுக்கு ரூ.87,67,810/– (ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்) வழங்கி உத்தரவிடப்பட்டது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மேலும், செயல்முறை ஆணை நாள் 09.10.2020–ன்படி, சேலம் மாவட்டத்தில் கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்ட நபர்கள் பல்வேறு சிகிச்சை மையங்களில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நிலையில் நோயாளிகளுக்கு சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருத்துவத் துறை மூலமாக வழங்கப்பட்ட உணவிற்கான செலவினத் தொகை ரூ.21,98,500/– (ரூபாய் இருபத்து ஒரு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) ஹோட்டல் ஸ்ரீவாரி சேலம்

மற்றும் ஹோட்டல் சரவணபவன், மேட்டூர் ஆகிய உணவகங்களுக்கு வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது எனவும், உதவி இயக்குநர், ஊராட்சிகள் (ஊவ) (ஊ), சேலம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் ரூ.87,67,810/– (ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்) செலவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு செலவுச்சீட்டுகள் மற்றும் பயன்பாட்டுச் சான்றிதழ் வரப்பெற்றுள்ளது எனவும், மேலும் வரப்பெற்ற கடிதம் மற்றும் பயன்பாட்டுச்சான்றிதழில் உதவி இயக்குநர், ஊராட்சிகள் (ஊவ) (ஊ), சேலம் அவர்கள் ரூ. 1,19,31, 582/– (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து முப்பத்து ஒரு ஆயிரத்து ஐநூற்று எண்பத்து இரண்டு) செலவினம் மேற்கொள்ளப்பட்டதாகவும், கூடுதலாக ரூ.31,63,772/– (ரூபாய் முப்பத்து ஒரு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து எழுநூற்று எழுபத்து இரண்டு மட்டும்) வழங்குமாறு கோரப்பட்டுள்ளது என சேலம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள், சேலம் மாவட்ட ஆட்சியர் பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை அபாய குறைப்பு முகமை நிதியிலிருந்து 50 விழுக்காடு செலவினம் மேற்கொள்ளப்பட்ட பிறகு கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற மீள முன்மொழிவுகள் அனுப்ப தெரிவிக்கபட்டுள்ள நிலையில், மேற்காணும் நேர்வில், உதவி இயக்குநர், ஊராட்சிகள் (ஊவ) (ஊ), சேலம் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை ரூ.87,67,810/– (ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்) இவ்வலுவலகத்தின் வாயிலாக ஹோட்டல் லட்சுமி ஸ்ரீவாரி சேலம் மற்றும் ஹோட்டல் சரவணபவன், மேட்டூர் ஆகிய உணவகங்களுக்கு உணவூட்டுச் செலவினங்களுக்கான தொகை ரூ.21,98,500/– (ரூபாய் இருபத்து ஒரு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து ஐநூறு மட்டும்) மேற்படி இரு தொகைகளின் கூடுதல் தொகை மொத்தம் ரூ.1,09,66,310/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முன்னூற்று பத்து மட்டும்) என்பதனால் ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதாலும், சேலம் மாவட்டத்தில் தொற்றுநோய் பாதித்தவர்களுக்கான சிகிச்சை மையம் மற்றும் உணவூட்டுச் செலவுகள் மேற்கொள்ள கூடுதலாக ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) அரசிடமிருந்து பெற்று வழங்குமாறும் கோரியுள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள், சேலம் மாவட்டத்தில் கொரானா தொற்றுநோய் பாதித்தவர்களுக்கான சிகிச்சை மையம் மற்றும் உணவூட்டுச் செலவுகள் மேற்கொள்ள கூடுதலாக ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. மேலும், பார்வை இரண்டில் காணும் அரசாணையின் படி, சேலம் மாவட்டத்திற்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளான கொரோனா தனிமைப்படுத்தும் மையத்தில் ஏற்படும் செலவினங்களுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனாலும், மேற்படி தொற்றுநோய் பாதித்தவர்களுக்கான சிகிச்சை மையம் மற்றும் உணவூட்டுச் செலவுகள் மேற்கொள்ள ஏதுவாக ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்)–னை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து (TNSDMA) நிதி ஒதுக்கீடு செய்து சேலம் மாவட்டத்திற்கு வழங்கிட அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துரு மற்றும் மாநில செயற்குழுவின் ஒப்புதலின் அடிப்படையில், பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி, சேலம் மாவட்டத்திற்கு கொரோனா வைரஸ் நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளான கொரோனா தனிமைப்படுத்தும் மையத்தில் ஏற்படும் செலவினங்களுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனாலும், மேற்படி தொற்றுநோய் பாதித்தவர்களுக்கான சிகிச்சை மையம் மற்றும் உணவூட்டுச் செலவுகள் மேற்கொள்ள ஏதுவாக ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்)–னை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து (TNSDMA) சேலம் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது,.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.19648/வருவாய் நிதி/2021, நாள் 26.04.2021–ல் பெறப்பட்ட இசைவுடனும், வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600009.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600005.
மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம்.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.
மாவட்ட கருவூல அதிகாரி, சேலம் மாவட்டம்.

**நகல்**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை– 600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.

நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2/ வ.வ.–1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு/ பே.மே.III) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/4/21

பிரிவு அலுவலர்